இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 221 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 08 – சனிக்கிழமை 22 மார்ச் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 221: Thiruvalluvar Year - 2056 - Panguni 08 - Saturday 22 March 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## அதிக குற்றச் சம்பவங்கள் அ.தி.மு.க. ஆட்சியில்தான்! கழக ஆட்சியில் குறைவு! அரசியல் ஆதாயம் தேடாதீர்!

# குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது!

## சட்டப்பேரவையில் ஆதாரங்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.3.2025) சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து விளக்கம் அளித்து உரையாற்றினார்.

**சென்னை, மார்ச் 22 -**

**அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நடைபெற்ற குற்றச் சம்பவங்களைவிட கழக ஆட்சியில் கடும் நடவடிக்கையினால் குற்றச் சம்பவங்கள் குறைந்துள்ளது எனவும், அங்கொன்றும் இங்கொன்றும் நடைபெறும் சம்பவங்களை வைத்து கழக ஆட்சியை குறை கூறி அரசியல் ஆதாயம் தேட வேண்டாம் என்றும் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆதாரங்களுடன் விளக்கமாகக் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சட்டம்ஒழுங்கு தொடர்பாக காவல் துறை மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முறைப்படி, விதிமுறைகளின்படி அனுமதி கேட்காவிட்டாலும், நீங்கள் அவரைப் பேச அனுமதி தந்தீர்கள். நீங்கள்கூட அனுமதி தருவதற்கு யோசித்தீர்கள். ஆனால், நான் உங்களிடம் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில், நீங்கள் அதை ஏற்றுக் கொண்டு அவரைப் பேச அனுமதித்தீர்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டு, அவர் முறையாகப் பேசியிருக்க வேண்டும்.

**நடந்த சம்பவங்கள் குறித்து தீவிர விசாரணை!**

ஆனால், அவர் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஏனென்றால், நான் பதிலளிக்கும்போது, வேறு ஏதாவது விஷயங்களை நான் எடுத்துச் சொல்லிவிடுவேன் என்று பயந்து கொண்டு, இன்றைக்கு அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், நான் அவர்களுக்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான்கு கொலைகள் நடந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். கோவை சம்பவத்தைப் பொறுத்தவரையில், முதற்கட்டமாக தற்கொலை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுரை சம்பவத்தைப் பொறுத்தவரையில், விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிவகங்கையில் நடைபெற்ற கொலை சம்பவம் குறித்து விசாரித்ததில், குடும்பத் தகராறு எனத் தெரிய வந்துள்ளது.

> **தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மற்றும் கூலிப்படையினர் எனக் கருதப்படுவோரின் நடவடிக்கைகள் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு முன்னெச்சரிக்கை கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான இனங்களில் குண்டர் சட்டத்தின்கீழும் கைது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.**

ஈரோட்டில் நடைபெற்ற சம்பவம் குறித்து நான் இப்போது விரிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

சேலம் மாவட்டம், கிச்சிப்பாளையத்தைச் சேர்ந்த சரித்திரப் பதிவேடு குற்றவாளியான ஜான் (எ) சாணக்கியன் என்பவர் உயர்நீதிமன்ற நிபந்தனை பிணையின் அடிப்படையில் அன்னதானப்பட்டி காவல் நிலையத்தில் நேற்று கையொப்பமிட்டுவிட்டு, தன்னுடைய மனைவியுடன் காரில் திருப்பூர் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, பின்னால் காரில் சென்ற அடையாளம் தெரியாத சிலர் இருவரையும் அரிவாளால் தாக்கிவிட்டுச் தப்பிச் சென்றிருக்கிறார்கள். காயமடைந்த சாணக்கியன் நிகழ்விடத்திலேயே உயிரிழந்துவிட்டார். அவரது மனைவி, சித்தோடு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

**ஈரோடு கொலை சம்பவத்தில் நால்வர் உடனடி கைது!**

தகவலறிந்த காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு, இதில் தொடர்புடைய கிச்சிப்பாளையத்தைச் சேர்ந்த சரவணன், சதீஷ், பூபாலன் மற்றும் மைனா கார்த்திக் ஆகியோரை பச்சப்பாளி என்ற இடத்தில் அவர்களது காரை மறித்து கைது செய்ய முயற்சி செய்தபோது, சதீஷ் உள்ளிட்டோர் காவல் துறையினரை கொடிய ஆயுதங்களால் தாக்கினர். இதனால் சித்தோடு காவல் ஆய்வாளர் பாதுகாப்பிற்காக அவங்களை நோக்கிச் சுட்டிருக்கிறார். இதில் சதீஷ், சரவணன் மற்றும் பூபாலன் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது. இதனையடுத்து, சதீஷ் உள்ளிட்ட நான்கு பேரும் சிகிச்சைக்காக பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். பின்னர் கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர்.

கிச்சிப்பாளையத்தைச் சேர்ந்த சரித்திரப் பதிவேடு குற்றவாளி செல்லதுரை கடந்த 2020 ஆம் ஆண்டு சேலம் மாநகரில் கொலை செய்யப்பட்ட வழக்கில், சாணக்கியன் இரண்டாவது எதிரி என்பதால், அதற்குப் பழிவாங்குகிற நோக்கத்தில் இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வருகிறது. காவல் துறையினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

தொடர்ச்சி 2–ஆம் பக்கம்

---

### தமிழ்நாட்டில் இன்று முதல் 5 நாட்களுக்கு

## ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, மார்ச் 22 -*

தமிழ்நாட்டில் இன்று முதல் 5 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளி மண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது

இதன் காரணமாக இன்று (22.03.2025) முதல் 26.03.2025 வரை 5 நாட்கள் தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டின் குறைந்தபட்ச வெப்பநிலை இன்றும் நாளையும் இயல்பை விட 23 செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும், குறைந்த பட்ச வெப்பநிலை இயல்பை விட 23 செல்சியஸ் அதிகமாகவும் இருக்கும் நிலையில், தமிழகத்தில் ஒருசில பகுதிகளில் அசௌகரியம் ஏற்படலாம் என வானிலை மையம் கூறியுள்ளது.

---

### தொகுதி மறுவரையறை தொடர்பாக விவாதம் நடத்த அனுமதி மறுப்பு

## தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் 2வது நாளாக ஆர்ப்பாட்டம்!

### நாடாளுமன்ற வளாகம் முன்பு தி.மு.க. – கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் முழக்கம்!




*புதுடெல்லி, மார்ச் 22 -*

தொகுதி மறு சீரமைப்பு தொடர்பாக, நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அனுமதி மறுக்கப்படுவதை கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் கட்சிகள் 2வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொகுதி மறுவரையறை குறித்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதிக்க வேண்டும் என்று திமுக சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. நாடாளுமன்ற இரு அவைகளிலும் இதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த நடவடிக்கையை கண்டித்து திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், தொகுதி மறுவரையறை குறித்து விவாதம் நடத்த அனுமதி வழங்கக் கோரி நாடாளுமன்ற வளாகத்தில் திமுக மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் இரண்டாவது நாளாக நேற்று முன்தினமும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு, நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, மக்களவை தி.மு.க. கொறடா ஆ.ராசா மற்றும் தயாநிதிமாறன் உள்ளிட்ட திமுக எம்.பி.,க்கள் அனைவரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். அப்போது, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்ற வாசகங்கள் எழுதப்பட்ட டிஷர்ட்டுகளை அணிந்தவாறு தமிழ்நாடு எம்.பி.க்கள் கண்டன முழக்கமிட்டனர்.

தொகுதி மறுவரையறை தொடர்பாக விவாதம் நடத்த அனுமதி மறுப்பு தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பாக, நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க. எம்.பிக்கள் எழுப்ப நோட்டீஸ் கொடுத்திருந்தோம்.

இந்த விவகாரம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கவலையை வெளிப்படுத்தியிருந்தார் ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறை விவகாரத்தில் மக்கள் தொகையை கட்டுப்படுத்திய மாநிலங்கள் பாதிக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியிருந்தார்.

இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு தனது நிலையை தெளிவுப்படுத்தவேண்டும் என நாங்கள் (தி.மு.க. எம்.பிக்கள்) தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம் தொகுதி மறுவரையறை தொடர்பாக, ஏற்பட்டுள்ள குழப்பத்திற்கு விளக்கம் அளிக்க வேண்டும் என தொடர்ந்து கூறி வருகிறோம். ஆனால், நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தாமல் ஒன்றிய அரசு மறுத்து வருகிறது எனத் தெரிவித்தனர்.

தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் நாடாளுமன்ற மாநிலங்களவையிலும் எதிரொலித்தது. இது குறித்து விவாதம் நடத்தக்கோரி அவையின் மைய பகுதிக்கு சென்று தி.மு.க. எம்.பி.க்கள் முழக்கமிட்டனர். ஆனால், வழக்கம்போல் மாநிலங்களவை தலைவர் இதற்கும் அனுமதி தரவில்லை. இதையடுத்து, எதிர்க்கட்சிகளின் தொடர் முழக்கத்தால் முதலில் நண்பகல்12 மணிவரை ஒத்திவைக்கப்பட்ட மாநிலங்களவை, பின்னர் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

---

### என் பதிலைக் கேட்கத் தைரியமில்லாமல் ஏன் ஓடுகிறீர்கள்?

## தூத்துக்குடி - சாத்தான்குளம் சம்பவங்களை மறக்க முடியாது! டி.வி.யைப் பார்த்து தெரிந்து கொள்பவர்கள் அல்ல நாங்கள்!

### சட்டப்பேரவையில் எடப்பாடி பழனிசாமி வெளிநடப்புக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டமான பதில்!

**சென்னை, மார்ச் 22 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்ய முற்பட்டபோது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுந்து, “என் பதிலைக் கேட்டுவிட்டுச் செல்லுங்கள். தைரியமின்றி பதிலைக் கேட்காமல் ஏன் ஓடுகிறீர்கள். அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற தூத்துக்குடி, சாத்தான்குளம் சம்பவங்களை மறக்க முடியுமா? அந்த நிகழ்வை அன்று முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிசாமி டி.வி.யில் பார்த்துத் தெரிந்து கொண்டதாகக் கூறினாரே, அது போல் அல்ல நாங்கள்!” எனக் காட்டமாகக் குறிப்பிட்டார்.**

சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் காரணம் காட்டி எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்ய முயற்சித்தபோது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த காட்டமான பதில் வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டம் ஒழுங்கு தொடர்பான பிரச்சினையை நேற்று முன்தினம் (20.03.2025) எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பி, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்ய முற்பட்டபோது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

“தூத்துக்குடியில் நடந்த சம்பவம், சாத்தான்குளத்தில் நடந்த சம்பவம் போன்றவற்றையெல்லாம் நீங்கள் மறந்துவிடக் கூடாது. உங்களைப் பொறுத்தவரையில், டி.வியைப் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன் என்று சொல்வதற்கு நாங்கள் தயாராக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தைரியம் இருந்தால், நான் பேசும் பதிலை கேட்டுவிட்டு அவர்கள் போக வேண்டும். உங்களுக்கு தைரியம் இருந்தால் பதிலைக் கேட்டுவிட்டுப் போக வேண்டும். அந்தத் தைரியம் இல்லாமல் ஓடுகிறீர்களே!”

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார். அதுபோது அவையில் இருந்த உறுப்பினர்கள் மேசையைத் தட்டி வரவேற்றனர்.